**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS.No. 280/2019**

**10.10.2025**

D.W.1 - நாகஜீவவள்ளி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் திருமணம் செய்த ஊர் நல்லுத்தேவன்பட்டி ஆகும். நான் பிறந்த ஊர் உசிலம்பட்டி ஆகும். நல்லுத்தேவன் பட்டி உசிலம்பட்டிக்கு தெற்கே உள்ளது. 2014 ல் அன்னக்கொடி தேவர்மனைவி சக்கரையம்மாள், மற்றும் அவர்களின் மகன்களிடம் 1253.5 சதுரடி காலிமனை வாங்கியுள்ளேன். சக்கரையம்மாளும், அவரது கணவரும் கொங்கப்பட்டியை சேர்ந்தவர்கள், கொங்கப்பட்டி உசிலம்பட்டிக்கு கிழக்கே 3 கிமீ தூரம் இருக்கும், கொங்கப்பட்டி கிராமத்தில் அதிக பழக்க வழக்கம் இல்லை என்றால் சரிதான். உசிலம்பட்டி நகரம் கிழக்கே கொங்கப்பட்டியையும் தாண்டி விஸ்தீரணம் ஆகி கொண்டே செல்கிறது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய இடம் மதிப்பு வாய்ந்த இடம் தான். நான் கிரையம் வாங்கிய இடம் சர்வே எண்.95/4 ல் கீழ்புறம் உள்ள 7 செண்டில் கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண். 95/4 ஏ, 3 ஏ 4 ல் கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் தரப்பில் சர்வே எண் . 95 /4 க்கான புல வரைபடம் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி புலவரைபடத்தை என்னுடைய சர்வே எண்ணுடன் சரிபார்த்தேன் என்றால் சரிபார்த்தேன். வா.சா.ஆ.8, 9 புலவரைபடங்களில் சர்வே எண். 95/4 ஏ, 3 ஏ 4 ல் காட்டப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கும் போது வாதிகளின் பெயரில் பட்டா உள்ளதா என்று பார்த்தேன் என்றால் பார்த்தேன். மேற்படி இடத்திற்கு சிட்டா நகல் வாங்கினேனா என்றால் வாங்கினேன். மேற்படி சிட்டா நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-4 என்னுடைய கிரைய பத்திரத்தில் ஒ ரு பட்டா இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா என்பது மனைவாரி தோராய பட்டா என்றால் சரிதான்.

தோராய பட்டா என்றால் தற்காலிமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பட்டா நிலையான பட்டா இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பட்டா நத்தம் நிலவரி தாசில்தார் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். மேற்படி பட்டா உண்மையான பட்டா இல்லை என்றால் சரியல்ல. நான் விசாரணையின் போது தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.2 ல் எனது பெயர் இல்லை என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்தவர் பெயர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 02.09.2025 ல் நகல் வாங்கினேனா என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி ஆவணம் எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் என்னுடம் சேர்ந்து கிரையம் வாங்கியவர்கள் பட்டா வாங்கிவிட்டார்கள். ஆனால் பட்டா வாங்க முயற்சிக்கவில்லை. பி.வா.சா.ஆ.2 ல் சர்வே எண். 95/4 ஏ, 3 ஏ 4 உட்பிரிவு இல்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்து அன்னக்கொடி தேவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அன்னக்கொடித்தேவர் பெயரில் சர்வே எண்-95/4 க்கு பட்டா இருந்தது என்றால் சரிதான். பட்டா நம்பர் தெரியாது. அன்னக்கொடித்தேவர் பெயரில் பட்டா இருந்ததாக என்னுடைய கிரைய பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 2014 ல் கிரையம் வாங்கினாலும், 2019 வரை பட்டா வாங்க முயற்சி செய்யவில்லை என்றால் எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் வாங்கவில்லை. எனக்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கு சொத்து பாத்தியமில்லை என்பதால் தான் நான் பட்டா வாங்க முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 கிரைய பத்திரம் செல்லாது என்றாலும், நான் கிரையம் பெற்ற சொத்தில் உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் விசாரணையின் போது கூடுதல் எதிர்வழககுரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி கூடுதல் எதிர் வழக்கு உரையில் முத்து என்ற பின்னத்தேவருக்கு இரண்டு மனைவிகள் என்று சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு தெரியாது, என் கணவருக்கு தான் தெரியும். கூடுதல் எதிர் வழக்குரையில் முத்து என்ற பின்னத்தேவருக்கு உள்ள ஆண்வாரிசுகளை பற்றி ஒப்பு கொண்டிருக்கிறேனா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண் 95/4

ல் 52 செண்டு உள்ளது என்றால் சரிதான். மேற்படி 52 செண்டும் ஆதியில் கருத்திவீரனுக்கு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 52 செண்டு கருத்திவீரனுக்கு பாத்தியப்பட்டது என்று வா.சா.ஆ. 1 அடங்கல் கணக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1ன் அடங்கல் கணக்கு பற்றி வழக்குரையிலேயே சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ-1 அடங்கல் கணக்கு உண்மையானதா அல்லது பொய்யானதா என்றால் எனக்கு தெரியாது. கருத்திவீரனுக்கு பழனியாண்டி, வீரணத்தேவர், மற்றும் பெரியகருப்பத்தேவர் என்ற 3 மகன்கள் இருந்தார்களா என்று எனக்கு தெரியாது. மேற்படி 52ல் கீழ்புறம் 18 செண்டு பழனியாண்டிக்கும், மய்யம் 17 செண்டு வீரணத்தேவருக்கும், மேல்புறம் 17 செண்டு பெரியகருப்பத்தேவருக்கும் பாத்தியப்பட்டது என்பது எனக்கு தெரியாது. மேல்புறம் 17 பெற்ற பெரியகருப்பத்தேவர் 1944 க்கு முன்பே இறந்து விட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அவர் இறந்த பிறகு மேல்புறம் 17 செண்டை அவருடைய வாரிசுகள் 1944ல் அக்னிவீரத்தேவருக்கு கிரையம் செய்துவிட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. கிழக்கு பக்கம் உள்ள 18 செண்டை அடைந்த பழனியாண்டியின் மகன் தான் அக்னிவீரத்தேவர் என்றால் எனக்கு தெரியாது. பழனியாண்டி எப்போது இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. 25.02.1944 ல் அக்னிவீரத்தேவர் மேல்புறம் 17 செண்டையும், கீழ்ப்புறம் 17 செண்டையும் முத்து என்ற பின்னத்தேவருக்கு கிரையம் செய்துவிட்ட விபரம் எனக்கு தெரியாது. முத்து என் ற பின்னத்தேவர் கிரையம் பெற்ற மேல்புறம் 17 செண்டை பற்றி பிரச்சினை இல்லை. முத்து என்ற பின்னத்தேவர் 04.04.1944 ல் அவர் கிரையம் பெற்ற 35 செண்டையும் மொக்கையன் என்ற பெரியகருப்பத்தேவருக்கு ஒத்தி வைத்த விபரம் எனக்கு தெரியாது. அதே சொத்தை 01.06.1948 ல் ஒத்தி வாங்கியவருக்கு மேல் ஒத்தி வைத்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி 2 ஒத்தியையும், 11.06.1950 ல் திருப்பி விட்ட விபரம் எனக்கு தெரியாது. அவர் திருப்பிய விபரம் அந்த பத்திரத்தின் பின்புறம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 11.06.1950 லிருந்து முத்து என்ற பின்னத்தேவர்இறக்கும் வரை அவர் தான் அனுபவம் செய்து வந்தார் என்றால்

எனக்கு தெரியாது. முத்து என்ற பின்னத்தேவருக்கு ஏகப்பட்ட வாரிசுகள் உள்ளனர் என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்படி 52 செண்டும் காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். உசிலம்பட்டியின் கிழக்கே உள்ள நிலங்களின் மதிப்பு கூடிவிட்டதால் நான் பி.வா.சா.ஆ.4 ல் கட்டுப்பட்ட சொத்தை மோசடியாக கிரையம் வாங்கினேன் என்றால் சரியல்ல- 28.12.2018 ல் நான் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்து, வாதிகள் தடுத்துவிட்டனர் என்றால் சரியல்ல. மேற்கொண்டு அந்த இடத்தில் வீடு கட்ட முயற்சித்தேன் என்றால் சரியல்ல. முத்து என்ற பின்னத்தேவருக்கு பல வாரிசுகள் பல இருப்பதால், வாதிகள் தங்களுக்காகவும், மற்ற வாரிசுகளுக்காகவும் இந்த வழக்கை தாக்கல் செய்தது முறையானது என்றால் சரியல்ல. கிரையம் வாங்கிய சொத்து வாதிகளிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.10 17:15:46 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.